# பூச்சுக்கொல்லிகளின் பாதுகாப்பான பயன்பாடு



**தேசிய நச்சுத் தகவல் மையம்**

**இலங்கை தேசிய வைத்தியசாலை**

**கொழும்பு**

## பூச்சுக்கொல்லிகளின் பாதுகாப்பான பயன்பாடு

இலங்கையில் பூச்சுக்கொல்லிகள் பொதுவாக விவசாய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பூச்சுக்கொல்லிகளின் பாதுகாப்பான பயன்பாடு பற்றி அறிந்திருப்பது அத்தியாவசியமானதாகும்.

### பூச்சுக்கொல்லியின் சரியான பயன்பாடு

#### கொள்வனவு செய்தல்

- ❖ விவசாய போதனாசிரியர் ஒருவரின் உதவியுடன் சரியான பூச்சுக்கொல்லியைத் தேர்ந்தெடுக்கவும்.
- ❖ ஒட்டுத்துண்டை வாசித்து காலாவதித் திகதி பற்றி கவனம் செலுத்தவும்.

#### போக்குவரத்து

- ❖ அதன் அசல் கொள்கலன்களில் எடுத்துச் செல்லவும்.
- ❖ கசியும் அபாயத்தைத் தவிர்க்கவும்.
- ❖ பயணிகள் பெட்டிகளில் அல்லது உணவுப் பொருட்களுடன் கொண்டு செல்லக்கூடாது.



#### களஞ்சியப்படுத்துதல்

- அசல் கொள்கலனில் சேமித்து வைக்கவும்
- அசல் ஒட்டுத்துண்டுளை அகற்ற வேண்டாம்.
- பூச்சுக்கொல்லிகளை ஒருபோதும் வெற்று உணவுக் கொள்கலன்களில் களஞ்சியப்படுத்த வேண்டாம்.
- வெற்று பூச்சுக்கொல்லி கொள்கலன்களில் உணவை ஒருபோதும் களஞ்சியப்படுத்த வேண்டாம்.
- உணவு மற்றும் குடிபானங்களுடன் ஒருபோதும் களஞ்சியப்படுத்த வேண்டாம்.
- குழந்தைகளுக்கு எட்டாதவாறு வைக்கவும்.



- பூட்டிய இடத்தில் வைக்கவும்



**பயன்படுத்துவதற்கு முன்னர் ஒட்டுத்துண்டையும் அறிவுறுத்தல்களையும் வாசிக்கவும்.**




## கலத்தல்

- கலக்கும் போது இறப்பர் கையுறைகளைப் பயன்படுத்தவும்.
- பூச்சிக்கொல்லிகளை கலக்கும் போது மரக்குச்சியைப் பயன்படுத்தவும்.



### தெளித்தல்

- பயன்படுத்துவதற்கு முன்னர் உபகரணத்தின் நிலையைச் சரிபார்க்கவும்.
- மருந்து தெளிப்பதற்கு முன்னர் குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை அப்பகுதியிலிருந்து விலக்கி வைக்கவும்.
- முழு உடலையும் மறைக்கும் வகையில் பாதுகாப்பான ஆடைகளைப் பயன்படுத்தவும்.



- பூச்சிக்கொல்லி மருந்தை காற்றின் திசைக்கு செங்குத்தாகத் தெளிக்கவும்.



- மழை நாட்கள் அல்லது பலத்த காற்று அல்லது அதிக வெப்பமான காலநிலையுள்ள நாட்களில் தெளிப்பதைத் தவிர்க்கவும்.
- வீட்டைச் சுற்றி தெளிக்கும் போது ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடி வைக்கவும்.
- தெளிக்கும் போது ஒருபோதும் உண்ணவோ, குடிக்கவோ அல்லது புகைக்கவோ கூடாது.



## பூச்சுக்கொல்லிகளைப் பயன்படுத்துவதற்கு காலை நேரமே சிறந்தது.

**பூச்சுக்கொல்லிகளைக் கையாண்ட பின்னர்,**

- உபகரணத்தை முறையாக சுத்தம் செய்யவும்.
- உபகரணங்களை சுத்தம் செய்யப் பயன்படுத்திய நீரை அருகிலுள்ள ஓடைகள் மற்றும் கிணறுகளுக்கு ஒருபோதும் வடிய விடாதீர்கள்.
- தெளிப்பதற்குப் பயன்படுத்திய ஆடைகளை தனியாகக் கழுவிவிட்டு குளிக்கவும் .

**வெற்று கொள்கலன்களை அகற்றுதல்.**

- மூன்று முறை நன்றாகக் கழுவிவிட்டு சேகரிக்கும் நிலையங்களுக்கு ஒப்படைக்கவும்.

அறுவடை காலம்: பூச்சிக்கொல்லிகளை தெளித்த பின்னர் குறைந்தபட்சம் 14 நாட்கள்.

## பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மை

ஒட்டுத்துண்டிலுள்ள எச்சரிக்கை குறியீடுகளுக்கேற்ப நச்சுத்தன்மையை அடையாளங்காண முடியும்.

முன்னெச்சரிக்கை - குறைவான நச்சுத்தன்மை
எச்சரிக்கை - மிதமான நச்சுத்தன்மை
அபாயம்- அதிக நச்சுத்தன்மை







பூச்சுக்கொல்லிகள் காரணமாக ஏற்படும் ஆரோக்கியக்கேடுகள் வெளிப்பாட்டின் தீவிரத்தன்மை மற்றும் அளவு என்பவற்றில் தங்கியுள்ளன.

குறைந்தளவிலானதொரு நச்சுப்பொருள் கூட அதிகளவில் வெளியிடப்படும் பொழுது தீங்கு விளைவிக்கக்கூடும்.

## எவ்வாறு உடல்நலக்கேட்டைக் குறைப்பது

- பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்கவும்
- முடிந்தவரை உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தவும்

## நஞ்சூட்டப்பட்டால்,

நோயாளியை உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவும்.

**011-2686143 / 011-2691111**

வி.தொ. **2430**

**தேசிய நச்சுத் தகவல் மையம்**

**இலங்கை தேசிய வைத்தியசாலை**

மின்னஞ்சல் : npdic.nhs@gmail.com
infotoxlanka@gmail.com

https://www.facebook.com/ NTPICSL

இணையத்தளம் http://www.toxbaselanka.info

**சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் தேசிய நச்சுத் தகவல் மையத்தினால் வெளியிடப்பட்டது.**